

திராவிட இயக்கத்துடன் எப்போதும் நெருக்கமாக பயணித்த குன்றக்குடி அடிகளார் அவர்களது மணி மண்டபத்தில் அடிகளாரின் திருவுருவச்சிலைக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செய்தார். உடன் திருமடத்தில் குன்றக்குடி ஆதீனம் தவத்திரு பொன்னம்பல அடிகளார் மற்றும் அமைச்சர்கள், கழக முன்னணியினர் உள்ளனர்.



சிவகங்கை மாவட்டம் கண்ணங்குடி ஒன்றியக்கழக செயலாளர் லெ.மு.ரவிச்சந்திரனின் மகள் ர.சிவசக்தி–செ.தமிழ்வாணன் ஆகியோரின் மணவிழாவை காரைக்குடியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நடத்தி வைத்து மணமக்கள் இருவரும் தமிழ் போல, கழகம் போல நல்வாழ்வு வாழ்கவென வாழ்த்தினார். இவ்விழாவில் அமைச்சர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



கடந்த டிசம்பர் மாதம் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சிகளில் பங்கேற்க இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் வருகை தந்தபோது, சிறுகூடல்பட்டி பெரியார் நினைவு சமத்துவபுரத்தைச் சேர்ந்த சிறுமிகள் ஜெசிந்தா , ஹாசினி ஆகியோர் அப்பகுதியில் பூங்கா அமைத்து தர கோரிக்கை விடுத்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று ரூ.14 லட்சம் செலவில் உடனடியாக பூங்கா அமைக்கப்பட்டது. இதற்காக சிறுமிகள் இருவரும் காரைக்குடிக்கு நேற்று வருகை தந்த அமைச்சர் உதய நிதி ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து தங்கள் அன்பை வெளிப்படுத்தினர். அவர்களுக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்து தெரிவித்தார். உடன் மாவட்டச் செயலாளர், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், ஆ.தமிழரசி எம்.எல்.ஏ. உள்ளிட்ட பலர் உள்ளனர்.



சென்னை, கிண்டியில் உள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், நேற்று (25.05.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, நெடுஞ்சாலைத்துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பல்நோக்கு மருத்துவ முகாமை தொடக்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்வின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், காவேரி மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் அய்யப்பன் பொன்னுசாமி, நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி நா.சாந்தி, தலைமைப் பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் ரூ.25.67 கோடியில் 3391 பயனாளிகளுக்கு நலஉதவிகள்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

புதுக்கோட்டை, மே 26

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், ரூ.25.67 கோடி மதிப்பீட்டில் 3,391 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று (25.05.2023) அனைத்துத் துறை அலுவலர்களுடன் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இவ்விழாவில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்வு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஐ.சா.மெர்சி ரம்யா, தலைமையில் நடைபெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக பல்வேறு துறை வாயிலாக அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதிலும் குறிப்பாக, மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவச பயணத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம், இல்லம் தேடி கல்வி, இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம், கலைஞரின் வரும் முன் காப்போம் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, இன்றையதினம் பல்வேறு அரசுத்துறைகளின் சார்பில் ரூ.25.67 கோடி மதிப்பீட்டில் 3,391 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், அனைத்துத் துறைகளின் வாயிலாக செயல்படுத்தப்படும் அரசுத் திட்டங்கள் குறித்து, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டித் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டப் பணிகள், புதுமைப் பெண் திட்டம், மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், மக்களைத் தேடி மருத்துவம், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் மகப்பேறு உதவித்தொகை வழங்கும் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டம், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், எண்ணும் எழுத்தும் இயக்கம், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம், அரசு பொதுத் தேர்வுகளில் மாணவ, மாணவியர்களின் தேர்ச்சி விகிதம் குறித்தும், முதல்வரின் முகவரி, ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், சாலை, குடிநீர் திட்டப் பணிகள், அடிப்படை வசதிகள் மேம்படுத்தும் திட்டங்கள், நகராட்சி நிர்வாகத்தின் சார்பில், கலைஞரின் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டம், வருவாய்த்துறையின் சார்பில், இசேவை மையம், சிறப்பு செயலாக்கத் திட்டத்தின்கீழ் நான் முதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடலின் கீழ் இந்தியாவிற்கே முன்னோடியாக எண்ணற்ற மக்கள் நலத்திட்டங்கள் பல்வேறு துறைகளின் வாயிலாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, மற்ற மாநிலங்களும் பின்பற்றும் வகையில் நகரப் பேருந்துகளில் மகளிருக்கான இலவச பயணத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் குழந்தைகளின் அடிப்படை கல்வியை மேம்படுத்தும் வகையில் தொடங்கி வைக்கப்பட்ட எண்ணும் எழுத்தும் திட்டம் புதுக்கோட்டை மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

எனவே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் செயல்படுத்தப்படும் இதுபோன்ற திட்டங்கள் மூலமாக தகுதியான நபர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில் அனைத்துத்துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து பணியாற்றி ஏழை, எளிய பொதுமக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடையவும், பொதுமக்கள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் மீது கொண்டுள்ள நம்பிக்கையை பிரதிபலிக்கும் வகையில் செயலாற்ற வேண்டும் என இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில், இராமநாதபுரம் பாராளுமன்ற உறுப்பினர் நவாஸ்கனி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி.வந்திதா பாண்டே, இ.கா.ப., புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர். வை.முத்துராஜா, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் எம். சின்னத்துரை, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி. நா.கவிதப்பிரியா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) து.தங்கவேல், வருவாய் கோட்டாட்சியர்கள் முருகேசன் (புதுக்கோட்டை), குழந்தைசாமி (இலுப்பூர்), சிவக்குமார் (அறந்தாங்கி பொறுப்பு), மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் திருமதி.த.ஜெயலட்சுமி, புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், நகர்மன்றத் துணைத் தலைவர் எம். லியாகத் அலி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க மதுரை மாவட்டத்தில் நலவாரியத்தில் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி திட்டம் மற்றும் கட்டுமான உள்ளிட்ட அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வழங்கினார். உடன் தமிழ் நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத் தலைவர் பொன்.குமார், மாவட்ட ஆட்சியர் திருமதி மா.செள.சங்கீதா, தொழிலாளர் இணை ஆணையர் பெ. சுப்பிரமணியன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.

## 2000 ரூபாய் நோட்டுகளை திரும்பப் பெறுவது

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான கொள்கையின் தொடர்ச்சி!

## கேரள முதல்வர் பினராயி விஜயன் கண்டனம்!



கோழிக்கோடு, மே 26-

ஒன்றிய அரசு தனது தவறான பொருளாதாரக் கொள்கையை தொடர்கிறது என்பதற்கு ரூ.2000 நோட்டுகளை திரும்பப் பெறும் நடவடிக்கையே சாட்சி என்று முதல்வர் பினராயி விஜயன் கூறினார்.

கேரள மாநில வணிகர்கள் மற்றும் தொழிலதிபர்கள் மாநில மாநாட்டின் பொது அமர்வை துவக்கி வைத்த முதல்வர் மேலும் கூறுகையில், “தொலை நோக்குப் பார்வையுடனும் திட்டமிடலுடனும் பொருளாதாரக் கொள்கையை ஒன்றிய அரசு செயல்படுத்தவில்லை. ஏழாண்டுகளுக்குள் மீண்டும் ரூபாய் நோட்டு வாபஸ் பெறப்பட்டது இதை தெளிவாக்குகிறது.

பண மதிப்பு நீக்கம், தொற்றுநோய் போன்ற நெருக் கடிகளில் இருந்து மீண்டு வரும் வர்த்தகம் மற்றும் தொழில் துறையை அழிப்பதே ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை” என்றார்.

அவர் மேலும் பேசியதாவது:

“ஒன்றிய அரசு பொருளாதார ரீதியாக நெருக்கடி ஏற்படுத்துகையில், கேரளத்தில் கடந்த ஏழு ஆண்டுகளாக வர்த்தகத் துறையை கேரள அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. தொழில்களுக்கு கேரளம் உகந்ததல்ல என்று சில உள்நோக்கம் கொண்டவர்கள் பிரச்சாரம் செய்கின்றனர். இது கேரளாவுக்கு எதிரான பிரச்சாரம்.

கடந்த 2015-ஆம் ஆண்டு ஒன்றிய அரசு புழக்கத்தில் இருந்த 85 சதவிகித ரூபாய் நோட்டுகளுக்கு தடை விதித்தது. இப்போது இரண்டாயிரம் ரூபாய் நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன. இதன் காரணமாக 11 சதவிகித ரூபாய் நோட்டுகள் மறைந்துள்ளன. நாட்டில் புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகளை ஒன்றிய அரசு சீர்குலைத்து வருகிறது. இது வர்த்தகம் மற்றும் தொழில் துறையை மட்டுமின்றி ஒட்டு மொத்த பொருளாதாரத்தையும் பாதிக்கும்.

கறுப்புப் பணம், ஊழல் மற்றும் பயங்கரவாதத்தைத் தடுக்க என்ற பெயரில் கடந்த 2016-ஆம் ஆண்டு நவம்பர் 8-ஆம் தேதி ரூபாய் நோட்டுத் தடை அறிவிக்கப்பட்டது. ஆனால் இவை எதுவும் உண்மையாகவில்லை.

வர்த்தகர்கள் பொருளாதாரத்தின் முது கெலும்பு. ஒன்றிய அரசின் பொருளாதாரக் கொள்கையால் வணிகத் துறையில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது. ஜி.எஸ்.டி.யை அறிவியல் பூர்வமாக அமல்படுத்தாதது வணிகர்களையும் மோசமாக பாதித்துள்ளது. நிலைத்தன்மையை குறிக்கோளாக கொண்ட தொழில்துறை மற்றும் வணிக நட்புச் சூழல் கேரளத்தில் உள்ளது. நாட்டின் பொதுத்துறைகள் மூடப்படும் நிலையில், இங்கு அவற்றை மாநில அரசு கையகப்படுத்துகிறது. உலகத்தரம் வாய்ந்த பன்னாட்டு நிறுவனங்கள் கேரளாவுக்கு வருகின்றன. கதவடைப்பும் ஆட்குறைப்பும் இல்லாத வேலைக் கலாச்சாரம் இங்கு வளர்ந்து வருகிறது.

கேரளா தொழில் தொடங்க ஏற்ற இடம். தொழில்முனைவோர் ஆண்டு மூலம் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட புதிய சிறு, குறு நிறுவனங்கள் இங்கு நிறுவப்பட்டன. இதையெல்லாம், பொய் பிரச்சாரம் செய்வோர் கண்டுகொள்வதில்லை. தொழில் துறையில் நிலைத்தன்மையே அரசின் குறிக்கோள். மாறிவரும் சவால்களை எதிர்கொள்ள மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொழில்கள் காலத்துக்கேற்ப நவீனமயமாக்கப்படும். முதலீட்டை அதிகரிக்கவும், நிலையான வணிகச்சூழலை உருவாக்கவும், தொழில் முனைவோரை வளர்ப்பதையும் இடது ஜனநாயக முன்னணி அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது.

இவ்வாறு கேரள முதல்வர் பினராயி விஜயன் கூறினார்.

கூட்டத்திற்கு அமைப்பின் மாநில தலைவர் வி.கே.சி.மம்மதுகோயா தலைமை தாங்கினார்.

## ஏ.நசீர் அகமது - அமரேஷ் புஜாரி முன்னிலையில்

# புழல் சிறையில் சிறைவாசிகள் காத்திருப்பு அறை!

## உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ராஜா திறந்தார்!

சென்னை, மே 26-

சென்னை புழல், மத்திய சிறை வளாகத்தில் சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி (பொ) நீதியரசர் டி.ராஜா தலைமையில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் எம். சுந்தர், நீதியரசர் ஜி.கே.இளந்திரையன் மற்றும் நீதியரசர் ஜி.சந்திரசேகரன் ஆகியோர் சிறைக்கு வருகை தந்தனர்.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களால் சிறையில் புதிதாக கட்டப்பட்டுள்ள “சிறைவாசிகள் காத்திருப்பு அறை” திறந்து வைக்கப்பட்டது. சிறையினுள் நீதியரசர்களால் மரக்கன்றுகள் நடப்பட்டன. பின்னர் அங்குள்ள சிறைவாசிகளை நேரில் சந்தித்து உரையாற்றும் பொழுது,

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண

நன்னயம் செய்து விடல்.

என்ற திருக்குறளை மேற்கோள் காட்டி சிறைவாசிகள் தங்களை சீர்திருத்தி கொள்ள அறிவுரைகள் வழங்கினர்.

பின்னர் சிறைவாசிகள் நீதியரசர்களுக்கு இசைக் கருவிகளை தாமாக இசைத்து தங்கள் திறமைகளை வெளிக்காட்டினார். சிறைவாசிகளின் இசை நிகழ்ச்சியினை ரசித்த நீதியரசர்கள் அவர்களை வெகுவாக பாராட்டினார். பின்னர் சிறைவாசிகளின் தொகுதிகளுக்கு சுற்று சென்று சிறைவாசிகளின் அறைகளை பார்வையிட்டனர்.

சுத்தம் மற்றும் சுகாதாரத்துடன் பராமரிக்கப்பட்டு வருவது குறித்து சிறை அலுவலர்களுக்கும், சிறைவாசிகளுக்கும் தங்களது பாராட்டுதல்களை தெரிவித்தனர்.

சிறையில் சிறைவாசிகளுக்கென தயாரிக்கப்பட்டிருந்த மதிய உணவினை உண்டு உணவின் தரம் மற்றும் ருசி குறித்து வெகுவாக பாராட்டினர்.

இந்நிகழ்ச்சியில் மாநில சட்ட பணிகள் ஆணைக் குழு தலைவர் ஏ. நசீர் அகமது, சிறைகள் மற்றும் சீர்த்திருத்தப் பணிகள் துறை தலைவர் அமரேஷ் புஜாரி, திருவள்ளூர் மாவட்ட முதன்மை நீதிபதி திருமதி. எஸ்.செல்வ சுந்தரி, தலைமை நீதித்துறை நடுவர் ஆர்.வேலராஜ், சென்னை சரக சிறைத்துறைத் துணைத் தலைவர் ஆ.முருகேசன், புழல், மத்திய சிறை கண்காணிப்பாளர்கள் இரா.கிருஷ்ணராஜ் மற்றும் திருமதி. நிகிலா நாகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயற்குழு கூட்டம் காஞ்சிபுரம் கலைஞர் பவள விழா மாளிகையில் மாவட்ட கழக அவைத் தலைவர் ச.இனிய அரசு தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.